# திண்டுக்கல் மாவட்ட கனிம நிதி அறக்கட்டளையின் 2017-18 நிதியாண்டிற்கான ஆண்டறிக்கை

தமிழ்நாடு மாவட்ட கனிம நிறுவன விதிகள், 2017-ன்படி, திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்: 213/2016 (கனிமம்) நாள்: 01.09.2017-ன்படி திண்டுக்கல் மாவட்ட கனிம நிறுவன அறக்கட்டளை நிறுவப்பட்டுள்ளது. மேற்படி அறக்கட்டளையானது, கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு மேலாண்மைக் குழு மற்றும் நிர்வாகக் குழு உறுப்பினர்களை கொண்டு ஆவண எண்: 31/2017, நாள்: 12.09.2017-ன்படி திண்டுக்கல் ஜாயிண்ட்-II சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | நிர்வாகக் குழு அமைப்பு | வ. எண் | மேலாண்மைக் குழு அமைப்பு |
|---|---|---|---|
| 1. | மாவட்ட ஆட்சித் தலைவர், திண்டுக்கல் | 1. | மாவட்ட ஆட்சித் தலைவர், திண்டுக்கல் |
| 2. | மாவட்ட வருவாய் அலுவலர், திண்டுக்கல் | 2. | மாவட்ட வருவாய் அலுவலர், திண்டுக்கல் |
| 3. | உதவி இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, திண்டுக்கல் | 3. | உதவி இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, திண்டுக்கல் |
| 4. | திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திண்டுக்கல் | 4. | திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திண்டுக்கல் |
| 5. | துணை இயக்குநர், சுகாதாரப் பணிகள், திண்டுக்கல் | 5. | மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர், ஊராட்சிகள் வளர்ச்சி (PAPD) திண்டுக்கல் |
| 6. | முதன்மைக் கல்வி அலுவலர், திண்டுக்கல் | 6. | உதவி இயக்குநர், ஊரக வளர்ச்சித்துறை, திண்டுக்கல் |
| 7. | மாவட்ட கருவூல அலுவலர், திண்டுக்கல் | 7. | மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர், திண்டுக்கல் |
| 8. | மாவட்ட சமூக நல அலுவலர், திண்டுக்கல் | 8. | மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், திண்டுக்கல் |
| 9. | உதவி இயக்குநர் (ஊராட்சிகள்), திண்டுக்கல் | 9. | மாவட்ட வன அலுவலர், திண்டுக்கல் |
| 10. | திண்டி-மா-வனம், திண்டுக்கல் | 10. | முதன்மைப் பொறியாளர், பொதுப்பணித்துறை, கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, திண்டுக்கல் |
| | | 11. | உதவி இயக்குநர், நில அளவைப் பதிவேடுகள் துறை, திண்டுக்கல் |
| | | 12. | மாவட்ட கருவூல அலுவலர், திண்டுக்கல் |
| | | 13. | மாவட்ட சமூக நல அலுவலர், திண்டுக்கல் |
| | | 14. | துணை இயக்குநர் (பொது நுகாதார மையப் பொறியாளர்), சுகாதாரப் பணிகள், திண்டுக்கல் |
| | | 15. | வருவாய் கோட்டாட்சியர், திண்டுக்கல் |
| | | 16. | சார் ஆட்சியர், பழனி |

-166

திண்டுக்கல் மாவட்ட கனிம அறக்கட்டளைக்காக, திண்டுக்கல் மாவட்ட கனரா வங்கி முதன்மைக் கிளையில் ஒரு வங்கிக் கணக்கு (கணக்கு எண்: 1006101077476) துவக்கப்பட்டு சிறுவகை மற்றும் பெருங்களிமங்களுக்கான உரிமக் கட்டணத்தின் அடிப்படையில் உரிய விதிகளின் மாவட்ட கனிம அறக்கட்டளைக்கான நிதி வசூலிக்கப்பட்டு வருகிறது.

திண்டுக்கல் மாவட்டத்தில் 33 பெருங்கனிம சுரங்க குத்தகை உரிமங்களும் 132 சிறுவகை கனிம குவாரி குத்தகை உரிமங்களும் நடைமுறையில் உள்ளது. நடைமுறையில் உள்ள 33 பெருங்கனிமக் குவாரிகள் மற்றும் 63 சிறுகனிம குவாரிகள் 12.01.2015-க்கு முன்னர் உரிமம் பெறப்பட்டுள்ளதால் அவற்றிற்கு உரிமக் கட்டணத்தில் 30% தொகையானது கனிம அறக்கட்டளை நிதியாக வசூலிக்கப்படுகிறது. மேலும் நடைமுறையில் உள்ள 69 சிறுவகை கனிமங்களுக்கு 10 % தொகையும் கனிம அறக்கட்டளை நிதியாக வசூல் செய்யப்பட்டு வருகிறது.

திண்டுக்கல் மாவட்டத்தில் 63 கிராம ஊராட்சிகள் 4 பேரூராட்சிகள் சுரங்கப்பணி மற்றும் குவாரிப்பணிகளால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளாக கண்டறியப்பட்டுள்ளன.

திண்டுக்கல் மாவட்ட கனிம நிதி அறக்கட்டளை நிதியாக 31.03.2018 வரை பெருங்கனிமங்களுக்கு ரூ.12,55,34,087/- மற்றும் சிறுகனிமங்களுக்கு ரூ.52,13,394/- ஆக மொத்தம் ரூ.13,07,47,481/- அறக்கட்டளை நிதியாக வசூலிக்கப்பட்டு அறக்கட்டளை வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

2017-18 ஆம் நிதியாண்டில் திண்டுக்கல் மாவட்ட நிதி அறக்கட்டளை மூலமாக எந்தத் திட்டங்களும் நிர்வாக ஒப்புதல் ஏதும் வழங்கப்படவில்லை.

| வ. எண் | திட்டத்தின் பெயர் | பணியின் விபரம் | மதிப்பு (ரூ) | நடைமுறைப்படுத்தப்படும் அமைப்பு | உயர் முன்னுரிமை/ பிற முன்னுரிமைத் திட்டம் |
|---|---|---|---|---|---|
| ஏதுமில்லை | | | | | |

திட்டங்கள் எதற்கும் நிர்வாக ஒப்புதல் வழங்கப்படாததாலும் தொகை ஏதும் ஒதுக்கீடு செய்யப்பட்டு செலவிடப்படாததாலும் 2017-2018-ஆம் ஆண்டிற்கான கணக்குத் தணிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

தலைவர்
திண்டுக்கல் மாவட்ட கனிம நிதி அறக்கட்டளை
மற்றும்
மாவட்ட ஆட்சித்தலைவர்
திண்டுக்கல்